# இயேசு கிறிஸ்துவுக்குச் சாட்சிகள்

Transcribed from a message spoken on 24th June 2012 in Chennai

By *R.S.Milton*

*"பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது, நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயாவிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்"* (அப். 1:8).

### *1.* பரம அழைப்பு- சாட்சியாக வாழ்தல்

இந்தப் பூமியிலே நாம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்குச் சாட்சிகளாக வாழ்வதற்காக அழைக்கப் பட்டிருக்கிறோம். இயேசு கிறிஸ்து என்ற நபர் எப்படிப்பட்டவர், அவருடைய குணம், அவருடைய வல்லமை, அவருடைய மகிமை ஆகியவைகள் எப்படிப்பட்டவை என்று இந்த உலகத்துக்குக் காண்பிப் பதற்கு அவருக்கு மனிதர்கள் தேவை. அப்படிப்பட்ட மனிதர்களாக நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். இதற்குப் பெயர் பரம அழைப்பு. பிலிப்பியர் 3ஆம் அதிகாரத்தில் அப்போஸ்தலனாகிய பவுல், *"கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருளைப்"*பற்றிப் பேசுவதுபோலவும், எபிரேயர் 3ஆம் அதிகாரத்தில் *"பரம அழைப்புக்குப் பங்குள்ளவர்களாகிய பரிசுத்த சகோதரரே"* என்று வாசிப்பதுபோலவும், நாம் பரம அழைப்புக்குப் பங்காளிகள் என்று நிச்சயமாகச் சொல்ல முடியும்.

நம் வாழ்க்கை சாதாரணமான வாழ்க்கை அல்ல. *"புசிப்போம், குடிப்போம், நாளைக்குச் சாவோம்,"* என்று (1 கொரி. 15:32) எப்பிகூரியன் தத்துவஞானிகள் சொல்வதுபோலவோ அல்லது "வெந்ததைத் தின்று விதிவந்தால் மாள்வோம்," என்று தமிழ்த் தத்துவஞானிகள் சொல்வதுபோலவோ வாழ்வதற்கு நாம் அழைக்கப்படவில்லை. ஆண்டவராகிய இயேசு எப்படிப்பட்டவர் என்பதை இந்த யுகத்திலே இந்த உலகத்துக்குக் காண்பிப்பதற்காக நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். இது மகிமையான, கனமான, பரம அழைப்பு. நம்முடைய பிதாவானவர் நாம் இந்த அழைப்புக்குப் பாத்திரர் என்று எண்ணினபடியால் நாம் அவரைத் துதிக்கிறோம்.

### சாட்சியாக வாழும் இடத்தைப் பிதாவானவர் தீர்மானிக்கிறார்

இயேசு கிறிஸ்து எப்படிப்பட்டவர் என்பதைக் காண்பிக்கிற நம்முடைய இந்தச் சாட்சி, எந்த இடத்திலே அவசியம் என்பதை நம்முடைய பிதாவானவர் தீர்மானிப்பார். இன்று சென்னையிலே நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம், இந்த இடத்தில் கூடிவருகிறோம். இங்குதான், இந்த இடத்திலேதான், நாம் தொடர்ந்து வாழ்வோம், கூடுவோம் என்று நாம் நினைக்கலாம். ஆனால், அவருடைய சாட்சி எங்கு வேண்டும் என்பதை நம்முடைய பிதாவானவர் கொஞ்சக் காலம் கழித்துத் தீர்மானிக்கலாம். அவருடைய சாட்சி இன்னொரு நகரத்தில், இன்னொரு பட்டணத்தில், இன்னொரு நாட்டில், இன்னொரு இடத்தில் தேவைப்படுகிறது என்று தேவன் நினைக்கலாம். அவர் அப்படி நினைக்கும்போது, நம்முடைய வாழ்க்கையிலே அவர் சூழ்நிலைகளை அமைத்து, எந்த இடத்திலே, எந்தக் காலத்திலே, இந்தச் சாட்சி தேவையோ அந்த இடத்துக்கு அவர் நம்மை நகர்த்திக்கொண்டு போவார். இதைத்தான் நாம் அப்போஸ்தலர் நடபடிகளில் பார்க்கிறோம்.

இந்த இடத்திலேயே நாம் நிரந்தரமாகத் தங்கப்போகிறோம் என்ற எண்ணத்தில், அடுத்த 10 வருடங் களுக்கு பெரிய திட்டங்களை வைத்துக்கொண்டு நாம் வாழக் கூடாது. ஒருவேளை தேவன் நம்மை நகர்த்துவது அடுத்த இரண்டு வருடங்களில் நடைபெறலாம் அல்லது அடுத்த ஒரு வருடத்தில் நடை பெறலாம் அல்லது அடுத்த மூன்று மாதங்களில்கூட நடைபெறலாம். Therefore, there should always be a sense of urgency. ஒரு பக்கம் நாம் மிகவும் relaxஆக வாழலாம். இன்னொரு பக்கம், தேவன் நம்மை எந்தக் கணமும் நகர்த்திக்கொண்டு போகலாம் என்பதால், நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற நாட்களை யும், வாரங்களையும், மாதங்களையும், வருடங்களையும் எந்த அளவுக்கு வீரியத்தோடு பயன்படுத்திக் கொள்ள முடியுமோ அந்த அளவுக்கு வீரியத்தோடு பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அப்படிப்பட்ட நாட்கள் விரைவில் வரும்.

### பொறுப்புகளைச் சுமத்தல்

எனவே, வரப்போகிற நாட்களுக்கு ஆயத்தமாவதற்கு. என்னுடைய எண்ணம் என்னவென்றால், கூடிய விரைவிலே, ஒரு குறிப்பிட்ட காலகட்டத்திற்குப்பிறகு, *நாம் பொறுப்புகளைச் சுமக்க வேண்டியவர் களாக இருப்போம்.*

ஒருவன் திருமணமானபிறகு பிள்ளைகளைப் பெற்றெடுக்கிறான். பிள்ளைகளைப் பெற்றபின் அவன் தகப்பனாக மாற வேண்டியது அவசியம். "*தகப்பனாக மாறுவதற்குத் தேவையான ஒரு குணமோ அல்லது பொறுப்புகளைச் சுமக்கிற பக்குவமோ இன்னும் எனக்கு இல்லை,*" என்று அவன் சொல்ல முடியாது. எந்தப் பயிற்சியும் எடுத்துக்கொண்டு எந்த மனிதனும் தகப்பனாவதில்லை. பிள்ளைகளைப் பெற்றபிறகு தகப்பனாக வாழ்வதற்குரிய பொறுப்புகளை நிறைவேற்றுவதற்குக் கற்றுக்கொள்ள வேண்டும். அது ஒரு காரியம்.

ஆனால், நம்முடைய பிதாவானவர் அப்படி நம்மை நடத்தும்போது, அதற்குரிய எல்லா ஆதரவையும், ஆதாரங்களையும், வளங்களையும் தருவதற்கு உண்மையுள்ளவராயிருக்கிறார். நம்மில் ஒருவரும் நம்முடைய பலத்தினால் அவருக்குப் பயனுள்ள வாழ்க்கையைக் கடுகளாவது வாழ முடியாது. தேவன் அவருடைய மகிமையின் செல்வங்களினால் நம்மைப் பலப்படுத்தாவிட்டால், நாம் ஒன்றைத் தொடங்குவது வீண். "*கர்த்தர் வீட்டைக் கட்டாராகில், அதைக் கட்டுகிறவர்களின் பிரயாசம் விருதா, கர்த்தர் நகரத்தைக் காவாராகில் காவலாளர் விழித்திருக்கிறது விருதா. நீங்கள் அதிகாலையில் எழுந்து, நேரப்பட வேலையிலே தரித்து, வருத்தத்தின் அப்பத்தைச் சாப்பிடுகிறதும் விருதா*" (சங். 127:1-3). தேவனே ஒன்றைச் செய்ய வேண்டும். தேவன் இதைச் செய்கிறார் என்று சொல்லும்போது, நாம் அவரோடு கூடச் சேர்ந்து நடக்க வேண்டியதுதான் நம்முடைய பொறுப்பு. இதுதான் நம் வாழ்க்கை.

## பரிசுத்த ஆவியானவரின் நடத்துதல்

எனவே, இதிலே நாம் தெளிவாக இருக்க வேண்டும். 2 வருடம், 5 வருடம், 10 வருடம், 20 வருடம் கழித்து, தேவன் ஒரு பொறுப்பைக் கொடுத்து, நம்மை ஒரு இடத்தில் சாட்சியாக வைப்பார். தேவனுடைய சாட்சி எப்போதுமே இரண்டு அல்லது மூன்றுபேர். இன்னும் சொல்லப்போனால் பரிசுத்த ஆவியானவர் ஒரு திசையில் அசைகிறாரா, நகர்கிறாரா, நடத்துகிறாரா என்பதை உறுதிசெய்வதற்கு அவர் 2 அல்லது 3 சாட்சிகளை வைப்பார். அப்போஸ்தலர் 13ஆம் அதிகாரத்தில் நாம் அதை வாசிக்கிறோம். "*அந்தியோகியா பட்டணத்திலுள்ள சபையில் பர்னபாவும், நீகர் என்னப்பட்ட சிமியோனும், சிரேனே ஊரானாகிய லூகியும், காற்பங்கு தேசாதிபதியாகிய ஏரோதுடனேகூட வளர்க்கப்பட்ட மனாயீனும், சவுலும் தீர்க்கதரிசிகளாயும் போதகர்களாயும் இருந்தார்கள். அவர்கள் கர்த்தருக்கு ஆராதனை செய்து, உபவாசித்துக்கொண்டிருக்கிறபோது: பர்னபாவையும் சவுலையும் நான் அழைத்த ஊழியத்துக்காக அவர்களைப் பிரித்துவிடுங்கள் என்று பரிசுத்த ஆவியானவர் திருவுளம்பற்றினார்*" (அப். 13:1-2). பர்னபா தனியாகப் போய், "பரிசுத்த ஆவியானவர் என்னை நடத்துகிறார்," என்றும் சொல்லவில்லை. சவுல் தனியாகப் போய், "கர்த்தர் என்னை நடத்துகிறார்," என்றும் சொல்லவில்லை. மற்ற சகோதரர்கள், "நீங்கள் போங்கள். நாங்கள் மாதந்தோறும் உங்களுக்கு ஆதரவு (support) தந்து உங்களைத் தாங்குவோம்," என்றும் சொல்லவில்லை.

தேவன் ஒரு திசையில் நடத்துகிறார் என்றவொரு எண்ணம் இருந்தாலும், அந்த எண்ணத்தை நாம் நம் சகோதரர்களிடம் சொல்லி, "தேவன் நடத்துகிற திசை இதுதானா?" என்று உறுதிசெய்துகொள்ள வேண்டும். இதை நாம் எப்போதும் பார்க்க வேண்டும். பவுல்கூட, "நான் ஆசியாவுக்குச் சென்று வசனத்தைச் சொல்ல விரும்பினேன். நான் பித்தினியாவுக்குச் செல்ல பிரயத்தனம்பண்ணினேன். பரிசுத்த ஆவியானவர் என்னைப் போகவொட்டாதிருந்தார். ஒரு இராத்திரியில் ஒரு கனவில் ஒரு மக்கெதோனியன் தோன்றி, நீர் மக்கெதோனியாவுக்கு வந்து எங்களுக்கு உதவி செய்யுங்கள் என்று அழைத்தான். உடனே நாங்கள் மக்கெதோனியாவுக்குப் போகுமாறு கர்த்தர் எங்களை நடத்துகிறார் என்று உறுதி செய்துகொண்டு மக்கதோனியாவுக்குப் போனோம்," (அப். 16:6-10) என்று சொல்லுகிறார். அவர் ஆசியாவுக்கும் போகவில்லை, பித்தினியாவுக்கும் போகவில்லை. மாறாக, மக்கெதோனியாவை நோக்கி நகர்ந்தார்கள். கனவு பவுலுக்கு வந்திருக்கலாம். ஆனால், அவர் தான் கண்ட கனவை மற்ற சகோதரர்களுடன் பகிர்ந்துகொண்டபோது அவர்களுடைய ஆவியிலே ஒரு ஆமோதிப்பு இருந்திருக்கும், இருக்க வேண்டும்.

## கூட்டு வாழ்க்கை ஒரு பயிற்சிக்கூடம்

நாம் கூடிவாழ்வது ஒரு பெரிய பயிற்சி. தனியாக வாழ்வது எளிதா அல்லது கூடி வாழ்வது எளிதா? தனியாக வாழ்வது எளிது. நாம் கூடிவாழும்போது பரிசுத்த ஆவியானவர் நம்மை ஒரு மறுசாயலாக்கும் வழிமுறையினூடாய் நடத்துகிறார். பணிதல், கீழ்ப்படிதல், பணிந்தடங்குதல் ஆகியவைகளெல்லாம் கற்றுக்கொள்வதற்கு மிகக் கடினமான பாடங்கள். இந்தப் பாடங்களையெல்லாம் நாம் கூடிவாழும்போதான் கற்றுக்கொள்கிறோம். அவைகளைக் கற்றுக்கொண்டபின்னர் தேவன் நம்மை நகர்த்துவார். ஆவைகளைக் கற்றுக்கொள்வதற்குமுன் தேவன் ஒரு மனிதனை நகர்த்துவதில்லை. அப்படிப்பட்ட மனிதன்

நகர்வது தேவனுக்கும் மற்றவர்களுக்கும் ஆபத்தானது. பணிவு, தாழ்மை, கீழ்ப்படிந்து அடங்குதல், ஒருவருக்கொருவர் பணிதல், ஒருவருக்கொருவர் கீழ்ப்படிதல், ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்து அடங்கு தல் ஆகியவைகளைக் கற்றுக்கொள்ளாத ஒரு மனிதன் நகர்ந்துபோய் தேவனுக்கென்று ஒரு வேலை செய்வது தேவனுக்கும் மற்ற மனிதர்களுக்கும் ஆபத்தானது, ஊறுவிளைவிக்கக்கூடியது.

ஆகவே, நம்முடைய அழைப்பு பரம அழைப்பு; நாம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்குச் சாட்சி யாக இருப்பதற்காக அழைக்கப்பட்டிருக்கிறோம். அது இந்த ஒரே இடத்திலேயே நடந்துகொண்டிருக் கப்போவதில்லை. தேவன் கூடிய விரைவிலே நம்மைப் பல்வேறு இடங்களுக்குக் கொண்டுபோவார். படித்துக்கொண்டிருக்கிற சகோதரர்கள் மேற்படிப்புக்காக வேறு எங்காவது போவார்கள். வேலை செய் கிறவர்கள் மாற்றலாகி அல்லது வேறு வேலைக்கு வேறு இடங்களுக்குச் செல்வார்கள். "ஆண்டவரே, என்னை வேறொரு இடத்துக்குக் கொண்டுபோகும். உம் சாட்சியாய் நிறுத்தும்," என்று நாம் துடிக்க வில்லை. ஆனால், இது தேவனுடைய நியமம். அவர்கள் குறிப்பிட்ட அளவு வளர்ச்சி அடைந்தபிறகு அவர்களுடைய வளர்ச்சிக்கேற்ற பொறுப்புகளைத் தேவன் அவர்களுக்குக் கொடுப்பார். "10, 15 வருடங்களாக நான் வளர்ந்துகொண்டேயிருக்கிறேன்," என்று நாம் தேவனிடம் சொல்ல முடியுமா? அப்படிச் சொன்னால் தேவன் அதை அங்கீகரிப்பாரா? அங்கீகரிக்கமாட்டார். இன்னும் சொல்லப் போனால், ஏற்ற காலத்தில் அவரவருடைய வளர்ச்சிக்கேற்ப தங்கள் தங்கள் பொறுப்புகளைச் சுமப் பதற்கு, நிறைவேற்றுவதற்கு, நாம் ஒரு வாய்ப்பை உருவாக்கிக்கொடுக்கவில்லையென்றால் தேவன் நம்மைச் சிதறடிப்பார். ஒருமுறை எருசலேமிருந்த சபைக்கு மிகுந்த உபத்திரவம் உண்டாயிற்று. அப் போது அப்போஸ்தலர்தவிர மற்ற யாவரும் யூதேயா, சமாரியா நாடுகளில் சிதறுண்டுபோனார்கள். சித றிப்போனவர்கள் எங்கும் திரிந்து சுவிசேஷ வசனத்தைப் பிரசங்கித்தார்கள் என்று அப்போஸ்தலர் 8ஆம் அதிகாரத்தில் வாசிக்கிறோம். நாமாக முன்வந்து, "ஆண்டவரே, என் வளர்ச்சி, முதிர்ச்சி, தேர்ச்சி, நிலை, பக்கும் எல்லாம் உமக்குத் தெரியும். அதற்கு ஏற்றாற்போல் எனக்குப் பொறுப்புகளைத் தாரும். என் வளர்ச்சிக்கும், முதிர்ச்சிக்கும், பக்குவத்துக்கும் மிஞ்சி எந்தப் பொறுப்பையும் தொடுவதற்கு நான் பயப்படுகிறேன்," என்று நாம் ஜெபிக்க வேண்டும்.

**பரிசுத்த பயத்தோடு பொறுப்புகளைச் சுமத்தல்**

இதையும் சொல்ல வேண்டும். பல சமயங்களில் நாம் காரியத்தைத் தொடும்போது தேவனுடைய இரு தயத்தின்பிரகாரம் தொடுவதில்லை; மாறாக, நம்முடைய கட்டமைப்பின்பிரகாரம் நாம் தொடுகிறோம். இதை நீங்கள் எல்லாரும் பல நூறு தடமை அனுபவிப்பீர்கள். ஒரு காரியத்தை, ஒரு சூழ்நிலையை, தொடும்போது தேவனுடைய இருதயத்தோடு, தேவனுடைய எண்ணத்தோடு, தேவனுடைய மென்மை யோடு நாம் தொடுவதில்லை. அந்த நேரத்தில் நம்முடைய கட்டமைப்பு, நம்முடைய வேகம் அல்லது நம்முடைய மெதுவான தன்மை, நம்முடைய வலுவான தன்மை அல்லது மிருதுவான தன்மை ஆகி யவைகளெல்லாம் வெளிவரும். அப்படித் தொடும்போது சில சமயம் அது அங்கு ஆசீர்வாதத்தைக் கொண்டுவருவதற்குப்பதிலாக இழப்பைக் கொண்டுவரும். அப்படி அனுபவித்தபிறகு நாம் எந்தக் காரியத்தையும் தொடுவதற்கு அஞ்சுவோம். அப்படிப்பட்ட அச்சம் உங்களிடத்தில் இருக்குமென்றால் அது பரிசுத்தமான அச்சம். "எனக்கு அப்படிப்பட்ட பயமே இல்லை, கர்த்தர் பயப்படதே என்று சொல்லி விட்டார்" என்று ஒருவன் சொன்னால் அது தவறு. கர்த்தர் "பயப்படாதே" என்று சொன்ன அந்தப் பயத்தை நான் சொல்லவில்லை. நான் சொல்வது Holy fear, வேதாகமம் அதை Reverence என்று அழைக்கிறது. தேவனுடைய காரியங்களில் தலையிடுவதற்கு அல்லது தேவனுடைய சார்பாக ஒருவ னிடத்தில் பேசுவதற்கு அல்லது ஒன்றைச் செய்வதற்கு நாம் பயப்பட வேண்டும். பயத்தோடும் நடுக் கத்தோடும் நாம் அதைச் செய்ய வேண்டும்.

தேவன் கொண்டுபோவார். இதன் பொருள், "ஆண்டவரே, எங்கள் எல்லாரையும் நீர் எடுத்துப் பயன் படுத்தும்," என்று நாம் துடிக்கவில்லை. எப்படி இந்தச் சரீர வாழ்க்கையில் பொறுப்புகள் என்பது இயற்கையான வளர்ச்சியில் வரவேண்டுமோ, அதுபோல ஆவிக்குரிய வாழ்க்கையிலும் இயற்கையான வளர்ச்சியில் பொறுப்புகள் வந்தாக வேண்டும். 2 வருடம், 5 வருடம், 10 வருடம் கழிந்தபிறகும் பொறுப்புகளை எடுப்பதற்கு எங்கு தேவனுடைய மக்கள் பக்குவமடையவில்லையோ, அந்தக் குடும்பம் ஒரு நேர்த்தியான குடும்பம் இல்லை. 21 வயது ஆனபிறகும் அம்மாதான் சம்பாதித்துக்கொண்டுவந்து சோறு தர வேண்டும் என்றால் அல்லது அப்பாதான் இன்னும் சம்பாதித்துச் சாப்பாடு தர வேண்டும் என்றால் அந்தக் குடும்பம் ஒரு நேர்த்தியான குடும்பமாக வளரவில்லை. அதேபோல் ஆவிக்குரிய பொறுப்பு.

நீங்கள் எல்லாரும் மிஷனரிகளாகச் செல்ல வேண்டும் என்றோ அல்லது நாம் எல்லாரும் உடன் ஊழியக்காரர்களாக மாற வேண்டும் என்றோ நான் சொல்லவில்லை. தேவனுடைய குடும்பம் வளரும்

போது எல்லாரும் பொறுப்புகளைச் சுமப்பார்கள். வளர்வதென்றால் என்ன பொருள்? அது பெருகும், அது விரிவடையும். அப்போது எல்லாரும் பொறுப்புகளைச் சுமப்பார்கள். எல்லாரும் பொறுப்புகளை எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதை உற்சாகப்படுத்துவதற்காகச் சொல்லவில்லை. மாறாக, இது நேர்த்தியான வளர்ச்சி. சிறுசிறு பொறுப்புகளை நாம் எடுத்துப் பழகியாக வேண்டும். துணை சபை களையோ, கிளைச் சபைகளையோ ஸ்தாபிப்பதல்ல நம் நோக்கம்.

இதை நன்றாக நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். ஒரு பக்கம் நாம் தேவனுடைய குடும்பமாக இருக் கிறோம். இன்னொரு பக்கம் தேவனுடைய குடும்பம் என்பது நாம் வளர்வதற்கும், பக்குவமடைவதற் கும், ஓரளவுக்கு ஒரு முதிர்ச்சியும் தேர்ச்சியும் பெறுவதற்குரிய பயிற்சிக்கூடமாக இருக்க இந்தக் கூட்டு வாழ்க்கை நமக்கு உதவிசெய்கிறது. அதுதான் நாம் கூடிவருவதின் நோக்கம். காலாகாலத்துக்கும் இப்படியே நாம் கூடிவந்துகொண்டிருப்பது நம் நோக்கம் இல்லை.

## 2. தேவனுடைய நித்தியத் திட்டம்

ஒருவேளை நீங்கள், "நாங்கள் தனியாகப் போனால் என்ன பேசுவோம்? என்ன செய்தி கொடுப்போம்? நீங்கள் எந்தப் புத்தகமும் தரவில்லையே!" என்ற கேள்வி கேட்கலாம். 500 பக்கங்கள் கொண்ட பத்துப் புத்தகங்களைக் கொடுத்தால் போதும். அப்போது கவலையேயிருக்காது. ஏனென்றால், என்ன பேச வேண்டும் என்ற பிரச்சினை இருக்காது. "இதுதான் பேச வேண்டிய செய்தி" என்று அந்தப் புத்தகங்களி லிருந்து தெரியும். ஆனால், அப்படிச் செய்ய முடியாது. இந்தப் பிரச்சினைக்கு அது தீர்வாகாது. அப்படியானால் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு என்ன?

தேவனுடைய மக்கள் எங்கிருந்தாலும் எல்லாரும் அவரவர் இருக்கிற இடத்தில் பக்கத்திலுள்ள, அருகி லுள்ள அண்டை அயலகத்தார் ஒன்றிரண்டுபேரை உங்கள் வீட்டுக்குக் கூப்பிட்டு தேவனுடைய வார்த் தையைப் பேசுங்கள். அப்படிப்பட்ட கூட்டத்துக்கு நீங்கள் என்ன பெயர் வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளலாம். ஜெபக்கூட்டம் அல்லது சிறுகுழுக்கூட்டம் அல்லது cell அல்லது vital group என்று என்ன பெயர் வேண்டுமானாலும் நீங்கள் வைத்துக்கொள்ளலாம். இப்படி ஒரு குடும்பத்திலே ஒரு சிலபேர் கூடி அந்த இடத்திலே தேவனுடைய நற்செய்தியைக் கேட்பதற்கு அவர்களுக்கு நாம் ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும். அதன்மூலம் அவர்கள் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் விடுதலை யைப் பெறுவார்கள். பிரச்சினையோடு வருகிறவர்களுக்காக ஜெபிக்கும்போது தேவன் அவர்களை விடுவிப்பார். அவர்கள் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின்மேல் விசுவாசம் வைப்பார்கள், அவர்மேல் அன்புகூருவார்கள்.

எனவே, நம்முடைய கூட்டுவாழ்க்கையின் நோக்கம், 50பேராக இருக்கிற நாம். இன்னும் ஒன்றிரண்டு ஆண்டுகளில் 100பேராக வேண்டும் என்பதோ அல்லது 100பேர் 1000பேராக அதிகரிக்க வேண்டும் என்பதோ இல்லை அல்லது எங்கெங்கெல்லாம் முடியுமோ அங்கு போய் நமக்கே உரித்தான ஒரு குறிப்பிட்ட உபதேசத்தைப் பரப்ப வேண்டும் என்பதோ இல்லை.

ஆனால், இந்தக் கேள்விக்குப் பதில்சொல்லியாக வேண்டும். என்ன பேசுவது? என்ன செய்வது? எதைப் பேசுவது?

இதற்கு ஒரேவொரு பதில்தான் உண்டு. தேவனுடைய நித்திய நோக்கமும், திட்டமும் என்ன என்பதைக் குறித்த வெளிப்பாடு, தரிசனம், நமக்கு உண்டு. அதை நாம் இதுவரை ஒரு புத்தக வடிவத்திலே அச் சடித்துக் கொடுக்காமல் போயிருக்கலாம் அல்லது வேதபாடம் (Bible study) என்ற முறையில் எழுதாமல் போயிருக்கலாம். ஆனால், ஓரளவுக்கு "இதுதான் தேவனுடைய திட்டம், தீர்மானம்," என்ற அறிவு, வெளிப்பாடு, தரிசனம் நமக்கு உண்டு.

இந்த முழு வேதாகமத்திலும் தேவன் ஒரு திட்டத்தை வைத் திருக்கிறார். அதற்கு நித்தியத் திட்டம் என்று பெயர். ஏன் அதற்கு நித்தியத் திட்டம் என்று பெயர்? ஏனென்றால், இந்த உலகங்கள் தோன்று வதற்குமுன்பே பிதாவின் மனதிலே, இருதயத்திலே, அந்தத் திட்டம் இருந்தது. எனவே, அது அநாதி யானது. காலங்கள் நிறைவேறி முடிவடையும்போது, இந்தக் காலகட்டங்களெல்லாம் முடிந்து, முடிந்து வரும்போது, நித்திய நித்தியமாயும் இந்தத் திட்டம் நிறைவேறியிருக்கும். எனவே, இந்தத் திட்டத்தின் பெயர் நித்தியத் திட்டம். ஆதியாகமம் தொடங்கி திருவெளிப்பாடு முடிய தேவன் மனித வரலாற்றிலே எல்லாவற்றையும் *"நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவுக்குள் கொண்டிருந்த அநாதி தீர்மானம்"* ஒன்றேவொன்றுக்காகத்தான் நடப்பிக்கின்றார் என்று எபேசியர் 3:9 சொல்லுகிறது. *"காலங்கள் நிறை வேறும்போது விளங்கும் நியமத்தின்படி பரலோகத்திலிருக்கிறவைகளும் பூலோகத்திலிருக்கிறவைகளு மான சகலமும் கிறிஸ்துவுக்குள்ளே கூட்டப்படவேண்டுமென்று தமக்குள்ளே தீர்மானித்திருந்த தம்*

*முடைய தயவுள்ள சித்தத்தின் இரகசியத்தை எங்களுக்கு அறிவித்தார்”* என்று எபேசியர் 1:9, 10யிலும் அதை வாசிக்கிறோம். அவருடைய இந்த நித்தியத் திட்டம் நிறைவேற வேண்டும் என்ற ஒரேவொரு குறிக்கோளோடுதான் அவர் இந்த மனித வரலாற்றிலே எல்லாவற்றையும், ஒவ்வொரு அசைவையும், ஏற்படுத்துகிறார். இதை நாம் நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

*“தமது சித்தத்தின் ஆலோசனைக்குத்தக்கதாக எல்லாவற்றையும் நடப்பிக்கிற அவருடைய தீர்மானத்தின படியே, நாங்கள் முன்குறிக்கப்பட்டு, கிறிஸ்துவுக்குள் அவருடைய சுதந்தரமாகும்படி தெரிந்துகொள்ளப் பட்டோம்”* (எபேசியர் 1:12). இந்த வசனம் மிகவும் அடர்த்தியானது. இதன் அடர்த்தி மிகமிக அதிகம். எனவே, இந்த வசனத்தைக் கொஞ்சம் உடைத்து உடைத்து வாசித்தால்தான் புரிந்துகொள்ள முடியும். *தமது சித்தத்தின் ஆலோசனை* என்பது அவருடைய திட்டம். தேவனுக்கு ஒரு திட்டம் உண்டு. “முயற்சி செய்து பார்ப்போம். இந்தத் திட்டம் நிறைவேறினால் நல்லது. திட்டம் நிறைவேறாவிட்டால் பரவா யில்லை. எத்தனை விழுக்காடு நிறைவேறுகிறதோ அந்த அளவுக்கு வந்ததுவரை இலாபம்,” என்று தேவன் எண்ணுகிறவர் இல்லை. தேவன் ஒரு திட்டமும், தீர்மானமும் வைத்திருந்தால் “முயற்சி செய்து பார்ப்போம். இந்தத் திட்டத்தில் மனிதர்களும் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். இந்த மனிதர்களைவைத்து ஒரு திட்டத்தை நிறைவேற்ற முடியுமா? அதனால், நம்முடைய நித்தியத் திட்டம் நிறைவேறாது. எத் தனை விழுக்காடு நிறைவேறுமோ அந்த அளவுக்கு நிறைவேறினால் போதும்,” என்று தேவன் யோசிப் பாரா அல்லது தேவன் ஒரு திட்டத்தைத் தீட்டினால் அதை நிறைவேற்றியே தீருவாரா? ஏதாவது ஒரு சக்தி அல்லது ஒரு நிகழ்ச்சி அவருடைய திட்டத்தைக் கவிழ்த்துவிட முடியுமா? முடியாது. தேவன் தம் முடைய திட்டத்தை நிறைவேற்றியே தீருவார். *“தேவரீர் சகலத்தையும் செய்ய வல்லவர். நீர் செய்ய நினைத்தது தடைபடாது என்பதை அறிந்திருக்கிறேன்”* (யோபு 42:2).

## தேவனுடைய நித்தியத் திட்டம்-கிறிஸ்து

இதோ! தேவனுடைய திட்டம். தமது சித்தத்தின் ஆலோசனைக்குத்தக்கதாக எல்லாவற்றையும் நடப்பிக் கிற அவருடைய தீர்மானம். என்ன? தேவனுடைய திட்டம் என்னவென்று நாம் சொல்ல வேண்டும்.

“இதுதான் என்னுடைய நித்தியத் திட்டம்,” என்று ஒரு நல்ல outlineல தேவன் ஒரு புத்தகத்தை எழுதி யிருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும். முழு வேதாகமத்திலும் ஆதியாகமத்திலிருந்து திருவெளிப் பாடுவரை எங்கேயாவது தேவனுடைய நித்தியத் திட்டமும் தீர்மானமும் என்பதைப்பற்றிய பெரிய குறிப்பு 1, பெரிய குறிப்பு 2, பெரிய குறிப்பு 3, பெரிய குறிப்பு 10, உபகுறிப்பு 1, உபகுறிப்பு 2 என்று எழதியிருந்தால் எவ்வளவு எளிதாக இருந்திருக்கும்! ஆனால், வேதாகமத்தில் அப்படி எழுதி யிருக்கிறதா? ஆதியாகமம்-முதலாவது தேவன் இந்த உலகத்தை உருவாக்கிய வரலாறு. அதன்பின் ஆபிரகாம் என்ற தனிமனிதனின் வரலாறு, அவனுடைய குடும்பம். பின்பு இஸ்ரயேல் தேசத்தைத் தேவன் எப்படி அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்குகிறார். அதன்பின் தேசத்தைத் தேவன் எப்படி நிலைப்படுத்துகிறார். அங்கு தேவாலயத்தை எழுப்புகிறார். எப்படி அந்தத் தேசம் வழுவிப்போகிறது. எப்படி தீர்க்கதரிசிகள்மூலமாக அவர்களை இடித்துரைக்கிறார். அதன்பின் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வருகிறார். அவருடைய வாழ்க்கை என்ன? அவருடைய போதனை என்ன? அவர் செய்த தென்ன? அவர் செய்துமுடித்த காரியங்களின் பொருள் என்ன? அதன்பின் கடிதங்கள். பிறகு இந்த உலகத்தின் முடிவிலே தேவன் எதிர்பார்ப்பதென்ன என்று இருக்கிறதேதவிர “இதோ தேவனுடைய திட்டம்,” என்று எங்கும் பத்துப் பக்கத்தில் எழுதி வைக்கவில்லை.

நான் இதை எதற்காகச் சொல்லுகிறேன் என்றால், “நீங்கள் எப்போது தேவனுடைய திட்டத்தைப்பற்றிச் சொன்னீர்கள்?” என்று ஒருவேளை நீங்கள் கேட்கலாம். மூன்று நாட்களோ அல்லது ஐந்து நாட்களோ மநாடு நடத்தி, “இதுதான் தேவனுடைய திட்டம்,” என்று நாம் இதுவரை பேசாமல் இருந்திருக்கலாம். ஆனால், நாம் எப்போதெல்லாம் ஐக்கியம் கொண்டிருக்கிறோமோ, கொள்ளுகிறோமோ, அப்போதெல் லாம் “இதுதான் தேவனுடைய திட்டம், இதுதான் தேவனுடைய தீர்மானம்,” என்று நாம் பேசுகிறோமா இல்லையா? மற்றவர்களுக்குச் சொல்வதற்கு அல்லது பேசுவதற்கு பிரயோஜனமாயிருக்கும் என்றால். தேவைப்பட்டால் 2, 3 நாட்களில் நாம் அவைகளைத் தொகுத்துச்சொல்லலாம்.

வேண்டுமானால் நான் சில புத்தகங்களையும் நான் பரிந்துரைசெய்வேன்.

1. The stewardship of the mystery of Christ by T.Austin Sparks
2. The ultimate intention by DeVern Fromke
3. Life on the highest plane by Ruth Paxson
4. Normal Christian life by Watchman Nee

5. The Economy of God by Witness Lee

இன்னும் நிறைய புத்தகங்கள் இருக்கின்றன. எனக்குத் தெரிந்த சில புத்தகங்களைச் சொல்கிறேன். தேவனுடைய மக்களுடன் ஐக்கியம் கொள்வதினால் உண்மையிலேயே தேவனுடைய நித்தியத் திட்டம் என்ன, தேவனுடைய தீர்மானம் என்ன, தேவன் அதை இந்த மனித வரலாற்றில் எப்படி நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார் என்று நாம் புரிந்துகொள்ளலாம். அது நம் நடைமுறை வாழ்க்கைக்குப் போது மானது. தேவனுக்கென்று ஒரு கனியுள்ள, பொருளுள்ள, மதிப்புள்ள வாழ்க்கை வாழ்வதற்கு அது போதுமானது. தேவனுடைய திட்டத்தைப்பற்றி ஒரு வெளிப்பாடும், தரிசனமும் நமக்கு வேண்டும்.

**வெளிப்பாடும், தரிசனமும்**

நாம் போகவேண்டிய திசையை நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். நாம் செய்துகொண்டிருப் பது ஒரு அற்பமான வேலையல்ல. மற்றவர்களுடன் ஒத்துப்போகமுடியவில்லை என்பதால் நாம் தனி யாகக் கூடிவருகிறோம் என்று நினைக்கவேண்டாம். தேவனுக்கு மதிப்புள்ள ஒன்று இங்கு நம் மிடையே, நமக்குள், இல்லையென்றால் நாம் இந்தக் கூட்டத்தைக் கலைத்துவிடலாம்.

நாம் எந்த நிலைக்கு வரவேண்டும் என்று தேவன் நினைக்கிறாரோ அந்த நிலைக்கு நாம் வந்துவிட்ட தாக, அதாவது, அந்த நிலையை எட்டிவிட்டதாக, அடைந்துவிட்டதாக, நான் நினைக்கவில்லை. ஆனால், அந்தத் திலையை நோக்கி நாம் போய்க்கொண்டிருக்கிறோம். தேவன் இன்னும் திருத்தங் களைச் செய்வதற்கு நாம் திறந்தவர்களாக இருக்க வேண்டும். "தேவனுடைய திட்டமும் தீர்மானமும் என்ன, அவர் அதை எப்படி நிறைவேற்றுகிறார் என்பதை அக்குவேறு ஆணிவேறாகப் பிரித்துப்போட்டு எல்லாவற்றையும் கண்டுபிடித்துவிட்டோம," என்ற நிலையை நாம் எட்டவில்லை. அப்படியென்றால் பரிசுத்த ஆவியானவர் மேற்கொண்டு ஏதாவது திருத்தங்களைச் செய்ய முடியுமா? செய்ய முடியாது. ஒரு பக்கம், தேவனுடைய திட்டம் என்ன, தீர்மானம் என்ன என்பதைப்பற்றி வெளிப்பாடு, தரிசனம் இருக்கிறது.

சிறு தாளில் அல்லது புத்தகத்தில் சில புள்ளிகளைவைத்து குழந்தைகளைப் படம் வரையச் சொல் வார்கள். "இந்தப் புள்ளிகளை இணைத்தால் ஒரு கரடியை அல்லது ஒரு மனிதனை அல்லது ஒரு மலரைக் காண்பீர்கள்," என்று சொல்லியிருப்பார்கள். நாம் அந்தப் புள்ளிகளை இணைத்தால் அவர்கள் சொன்னதுபோல ஒரு கரடியோ அல்லது ஒரு மனித உருவமோ அல்லது ஒரு மலரோ இருப்பது தெரியும்.

வெளிப்பாடு அல்லது தரிசனம் என்று நாம் சொல்வது என்னவென்றால் தேவனுடைய திட்டத்தைப்பற் றிய இந்தப் புள்ளிகளையாவது நாம் பார்க்க வேண்டும். புள்ளி 1, 2., 3 என்று சில புள்ளிகளை நாம் கற்றுக்கொள்ள வேண்டும். நாம் இப்போது 10 புள்ளிகளை வைத்துத் தேவனுடைய திட்டத்தைப் பார்க் கிறோம் என்றால் இன்னும் சில வருடங்கள் கழித்து ஒருவேளை தேவன் அந்தப் புள்ளிகளோடு இன் னும் சில புள்ளிகளைச் சேர்க்கலாம். இன்றைக்குப் பார்க்கிற சித்திரம் ஒருவேளை நேர்கோடு நேர் கோடாக இருந்தால், இன்னும் 10 வருடங்கள் கழித்து அந்த நேர்கோடுகள் குறைந்து கொஞ்சம் வளை வான கோடுகள் வந்திருக்கும். 10 புள்ளிகளுக்குப்பதிலாக 50 புள்ளிகளை வைத்து படத்தை வரைந் தால் நன்றாக இருக்குமா இருக்காதா? எளிதாகவும் இருக்கும், இன்னும் கொஞ்சம் துல்லியமாகவும் இருக்கும். ஆனால், காலத்துக்குமுந்தி 10 புள்ளிகளுக்குப்பதிலாக 50 புள்ளிகளை வைக்கக்கூடாது. அப்படி வைத்துவிட்டு "எங்களால் அதை மாற்றவே முடியாது" என்று நாம் சொல்லக்கூடாது. பரிசுத்த ஆவியானவர் நம்மைத் திருத்துவதற்கு, நம்மைச் சரிசெய்வதற்கு, நம்மை adjust பண்ணுவதற்கு, நாம் அவருக்கு இடம் கொடுக்க வேண்டும். "பத்துப் புள்ளிகளை வைத்து நீ தேவனுடைய திட்டத்தைப் பார்த்தால் போதும்," என்று தேவன் சொல்லும்போது, நான் "இல்லை! இல்லை! நான் 50 புள்ளிகள் வைக்க வேண்டும்," என்று சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. பிதாவானவர் நம்மை நடத்துவார். இது ஒன்று.

நம்முடைய கூடுகை தேவனுடைய நித்தியத் திட்டம் நிறைவேறுகிற கூடுகையாக இருக்க வேண்டும்; தேவ மக்களுடைய வாழ்க்கை தேவனுடைய நித்தியத் திட்டம் நிறைவேறுகிற வாழ்க்கையாக இருக்க வேண்டும்; நாம் தேவனுடைய மக்களை நடத்துகிற விதம் தேவனுடைய நித்தியத் திட்டம் நிறைவேறு கிறதற்கு ஏதுவாக இருக்க வேண்டும். நாம் நடக்கிற விதமும், வாழ்கிற விதமும் தேவனுடைய நித்தியத் திட்டம் நிறைவேறுகிற ஒரு வாழ்க்கையாக இருக்க வேண்டும்.

தேவனுடைய நித்தியத் திட்டம் என்ன? ஒரு வாக்கியத்தில் சொல்ல முடியுமா? "*காலங்கள் நிறைவேறும் போது விளங்கும் நியமத்தின்படி பரலோகத்திலிருக்கிறவைகளும் பூலோகத்திலிருக்கிறவைகளுமான*

*சகலமும் கிறிஸ்துவுக்குள்ளே கூட்டப்படவேண்டுமென்று தமக்குள்ளே தீர்மானித்திருந்த தம்முடைய தயவுள்ள சித்தத்தின் இரகசியத்தை எங்களுக்கு அறிவித்தார்"* என்று (எபே. 1:9, 10) வாசிக்கிறோம். இந்தப் பிரபஞ்சத்தின் காலகட்டங்கள் நிறைவேறும்போது பிதாவானவர் இந்தப் பிரபஞ்சத்தைப் பார்க்கும்போது, பிரபஞ்சத்தில் ஒன்றேவொன்றைத்தான் பார்க்க விரும்புகிறார். அது என்ன? இந்த மனிதர்கள் எல்லாரிடத்திலும் அவர் எதை மட்டும்தான் பார்ப்பார்? கிறிஸ்துவை மட்டும்தான் பார்க்க வேண்டும். அந்த அளவுக்கு அவர் மனிதர்களைக் கிறிஸ்துவின் குணத்துக்கு ஒத்த சாயலாக மாற்றியிருப்பார். "நான் இன்றைக்கு எப்படி வாழ்ந்தாலும் சரி, காலங்கள் நிறைவேறும்போது தேவன் என்னைக் கிறிஸ்துவைப்போல் மாற்றிவிடுவார்," என்பது தவறு. அது தவறு.

**மறைவான வாழ்க்கை**

"இன்றைக்கு நாம் எடுக்கிற சிறுசிறு தீர்மானங்கள்தான் இன்னும் பத்து வருடம், இருபது வருடம் கழித்து நாம் எப்படிப்பட்ட மனிதர்களாக இருப்போம் என்பதையும், நம்மில் கிறிஸ்து எந்த அளவுக்கு உருவாகியிருப்பார் என்பதையும் தீர்மானிக்கும்," என்று ஒரு சகோதரன் (நீல் பக்மேன்) சொன்ன காரியம் என்னை அதிகமாகத் தொட்டது. இன்றைக்கு நாம் எடுக்கிற சிறுசிறு தீர்மானங்கள். இதை மறுபடியும் சொல்லுகிறேன். பத்து வருடம், இருபது வருடம் கழித்து ஒரு மனிதனுக்குள் எந்த அளவுக்குக் கிறிஸ்துவின் குணம் உருவாகியிருக்கும் என்பதை எது தீர்மானிக்கும்? அதை எப்படிக் கண்டுபிடிக்கலாம்? இன்றைக்கு நாம் எடுக்கிற சிறுசிறு தீர்மானங்களே. நீங்கள் பேசுகிற தேவனுடைய வார்த்தையைத் தேவன் கனம்பண்ணுவாரா இல்லையா என்பது மறைவான உங்கள் வாழ்க்கை தேவனுக்கு முன்பாக எப்படி இருக்கிறது என்பதைப் பொறுத்திருக்கிறது. நம்முடைய பல எண்ணங்களையும், உணர்ச்சிகளையும் நாம் வெளியே சொல்வதில்லை.

எனவே, நாம் தேவனுடைய மக்களை நடத்துகிற பாதை என்ன? தேவனுடைய நித்தியத் திட்டம் என்றால், "ஆ! கர்த்தராகிய இயேசு ஒருநாள் வரும்போது அவர் தம் பரிசுத்தவான்களிலே மகிமையடைவதற்காக வருவார்," என்பதல்ல. எப்படி மகிமை அடைவார்? திடுதிப்பென்று நாம் மகிமைக்குள் பிரவேசிப்பதுமில்லை; திடுதிப்பென்று அவர் நம்மை மகிமைப்படுத்துவதுமில்லை. மகிமைப்படுவது என்பது படிப்படியாக நடக்கிற ஒரு வழிமுறை. ஒரு பக்கம் அது படிப்படியாக நடக்கிற ஒரு வழிமுறை. இன்னொரு பக்கம் அது திடுதிப்பென்று நடக்கிற காரியம். It is both gradual and critical. அது மெல்ல மெல்ல நடந்துகொண்டிருக்கும், ஆனால் திடுதிப்பென்றும் நடக்கிறதுபோலவும் இருக்கும்.

அது ஏறக்குறை ஆகாயவிமானம் மேலே எழும்பிச் செல்வதைப்போன்றது. அது மேலே எழும்புகிறது. அது படிப்படியாக நடைபெறுகிற ஒன்றா அல்லது டக்கென்று நடைபெறுகிற ஒன்றா? அது ஓடிக கொண்டே போகிறது. டக்கென்று மிதக்க ஆரம்பிக்கிறோம்.

அதுபோல தேவன் நம்மை க்கிறிஸ்துவின் சாயலுக்கு மறுசாயலாக்கிக்கொண்டே போகிறார். ஒவ்வொரு நாளும் அதிலே நாம் சிறுசிறு அளவுக்கு உண்மையுள்ளவர்களாக இருந்தால், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அவருடைய பரிசுத்தவான்களில் மகிமைப்படுவார்.

***3. பரிசுத்த ஆவியில் நடக்கிற வாழ்க்கை***

இன்னொன்றையும் நான் சொல்ல வேண்டும். நம்முடைய வாழ்க்கை **பரிசுத்த ஆவியில் நடக்கிற வாழ்க்கை.** இதை நாமும் செய்ய வேண்டும். தேவனுடைய மற்ற பிள்ளைகளுக்கும் கற்றுக்கொடுக்க வேண்டும். ஒரு பக்கம் நம்மை ஆளுகைசெய்வது தேவனுடைய நித்தியத் திட்டமாக இருக்க வேண்டும். முழு வாழ்க்கையையும் இதுவே ஆளுகை செய்ய வேண்டும். முழு வாழ்க்கை என்றால் நம்முடைய படிப்பு, நம்முடைய வேலை, நம்முடைய வீடு, எல்லாவற்றையும் ஆளுகை செய்வது தேவனுடைய நித்தியத் திட்டமாக இருக்க வேண்டும். வேறு வார்த்தைகளில் சொல்வதானால் கிறிஸ்து அவருக்குரிய இடத்துக்கு வருவது. கிறிஸ்து அவரைக்கொண்டு என்னை நிரப்புவது.

இரண்டாவது, நடைமுறைக்குரிய ஒன்று என்னவென்றால் தேவனுடைய மக்கள் ஒவ்வொரு நாளும், தங்கள் வாழ்வின் எல்லாப் பகுதிகளிலும் ஆவியானவரில் நடக்க வேண்டும். கிறிஸ்தவ வாழ்க்கையை ஒரு வாக்கியத்தில் சுருக்கமாகச் சொல்வதாக இருந்தால் இந்த ஒரு வாக்கியத்தில் சொல்லிவிடலாம். **ஆவியானவரில் நடந்துகொள்ளுங்கள், ஆவியானவருக்குச் செவிகொடுங்கள், ஆவியானவருக்குக் கீழ்ப்படியுங்கள், ஆவியானவரைப் பின்பற்றுங்கள். Walk in the Spirit, listen to the Spirit, obey the Spirit, follow the Spirit, and be led by the Spirit.** இது இல்லாமல் தனிப்பட்ட விதத்திலோ அல்லது கூட்டாகவோ, அதாவது சபையாக அல்லது குடும்பமாக, கிறிஸ்துவின் அளவு நம்மிடத்தில் பெருகுவதற்கு வாய்ப்பே இல்லை.

இன்று காலையில் ஆவியானவரால் நடத்தப்பட்டு இந்தக் கூடுகைக்கு வந்தோமா அல்லது பழக்கத்தின் காரணமாக வந்தோமா? ஒருவன் தன் மனைவியிடம், "நான் உன்னை நேசிக்கிறேன்," என்று ஆயிரம் தடைவ சொல்லுகிறான் என்று வைத்துக்கொள்வோம். இது உதட்டிலிருந்து வருகிறதா அல்லது உள்ளத்திலிருந்து வருகிறதா? 50 வருடங்கள் ஆனபின் ஒரு கணவன் தன் மனைவியிடம், "நான் உன்னை நேசிக்கிறேன்," என்று சொல்வதைக் குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? இப்படிச் சொல்ல வேண்டும் என்று நினைக்கிறீர்களா அல்லது "இப்படியெல்லாம் சொல்ல வேண்டிய தேவை யில்லை. இந்த வார்த்தையெல்லாம் எதற்கு?" என்று நினைக்கிறீர்களா? இப்படிச் சொல்வதும், இப்படிக் கூட்டங்களில் கலந்துகொள்வதும் சடங்காச்சாரமாக மாறுகிற ஆபத்து இருக்கிறது.

நாம் எல்லாவற்றையும் ஆவியில்தான் செய்ய வேண்டும். நம்முடைய கூடுகைகூட ஆவியில்தான் இருக்க வேண்டும். காரியம் என்னவென்றால், "ஆண்டவரே, பழமை எங்களைக் கௌவாமல், இன் றைக்கு ஆவியானவரில் எல்லாவற்றையும் செய்ய விரும்புகிறோம், ஆவியானவரில் வாழ விரும்பு கிறோம்," என்பது நம் ஏக்கமாக இருக்க வேண்டும்.

1. நாம் இந்தப் பூமியிலே ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவுக்குச் சாட்சிகளாக வாழ்வதற்காக அழைக் கப்பட்டிருக்கிறோம். இதன் பொருள் என்னவென்றால் ஒரே இடத்திலே நாம் ஒரு பெரிய கோட்டை யைக் கட்டிக்கொண்டிருப்பதல்ல. தேவன் தமக்குச் சித்தமான காலத்திலே தமக்குச் சித்தமான இடத் துக்கு அவருடைய மக்களை இரண்டிரண்டுபேராகவோ அல்லது மூன்றுமூன்றுபேராகவோ கொண்டு போவார். அவருடைய நம்பிக்கைக்குரிய பிள்ளையென்றால் ஒரே ஆளாகக்கூட அனுப்பிவைப்பார். இதன்மூலமாகத் தேவனுடைய குடும்பம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவுக்குச் சாட்சி பகரும், அது விரிவடையும், வலுவடையும். இதுதான் இயல்பான வாழ்க்கை.

ஒரு எச்சரிப்பு. நாம் எண்ணிக்கையில் பெருக வேண்டும் என்பதற்காக நீங்கள் அங்கு ஆரம்பியுங்கள், இங்கு ஆரம்பியுங்கள்," என்று சொல்லவில்லை. ஒரு குடும்பத்தின் இயல்பான வளர்ச்சியில் வெவ் வேறு காலங்களில், காலங்கள் மாறும்போது, தேவன் தம் மக்களை ஏற்ற காலத்தில் ஏற்ற இடங்களுக் குக் கொண்டுசெல்வார். இன்று நாம் என்ன செய்துகொண்டிருக்கிறோம் என்றால் தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் அதற்காக ஆயத்தமாவதற்கு, அவர்களை ஆயத்தமாக்குவதற்கு, தேவன் நமக்கு ஒரு வாய்ப்பைக் கொடுத்திருக்கிறார். இந்த வாய்ப்பை நாம் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். இன்று நாம் பொறுப்புகளை உருவாக்குவதற்கும், பகிர்ந்துகொள்வதற்கும், பொறுப்புகளை நிறைவேற்றுவதற் கும் வாய்ப்புகளை உருவாக்கிக்கொண்டிருக்கிறோம்.

மிக முக்கியமாக பேசுகிற பொறுப்பை நீங்கள் நிறைவேற்றுங்கள். இரண்டு நிமிடமோ, மூன்று நிமிடமோ, ஐந்து நிமிடமோ பேசுங்கள். தவறாகப் பேசுவதைப்பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டாம். பேசி முடித்தபின் உங்களைக் correct பண்ணுவதைப்பற்றி நீங்கள் வருத்தப்படவும் வேண்டாம். ஏனென் றால், இன்னும் பத்து வருடம் கழித்து உங்களை யாரும் correct பண்ணப்போவதில்லை. correct பண்ணப்படுவது ஒரு சுமையல்ல. correct பண்ணப்படுவது ஒரு பாக்கியம். ஏணியில் இரண்டாவது படியில் இருக்கும்போதே correct பண்ணிவிட்டால் அதிகமான பாதிப்பு ஏற்படாது. இருபது படி ஏறினபிறகு கீழே விழுந்தால் எலும்பு முறிந்துவிடும். எனவே, இன்னும் 20 வருடங்கள் கழித்து correct பண்ணப்பட்டால் அதன் விளைவு கொடூரமாக இருக்கும். இன்னும் சொல்லப்போனால் அது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் சிலுவை, மரணம், உயிர்த்தெழுதலை அனுபவிப்பதற்கு நமக்கு ஏதுவாயிருக்கும்.

2. தேவன் ஒரு காலத்திலே, ஒரு இடத்திலே, நம்மை சாட்சியாக வைக்கும்போது, எங்கு சாட்சியாக வைத்தாலும், நாம் நம்முடைய வாழ்க்கை முழுவதும் தேவனுடைய நித்தியத் திட்டத்தை மையமாகக் கொண்டிருக்க வேண்டும். ஏனென்றால், தேவனுடைய நித்தியத் திட்டம் அல்லாமல் சுவாரஸ்யமான காரியங்கள் இந்த ஆவிக்குரிய உலகத்தில்கூட, கிறிஸ்தவ உலகத்தில்கூட நிறைய உண்டு.

3. தேவனுடைய நித்தியத் திட்டத்தை நம்முடைய வாழ்க்கையின் மையமாகக் கொண்டிருக்க வேண்டும் என்பது நடைமுறையில் எப்படிச் செயலாக்கப்படும்? ஆவியில் வாழ்வதுதான் நடைமுறைப்படுத்துவதற் கான வழி. நாம் தேவனுடைய நித்தியத் திட்டத்தைப்பற்றி மிகவும் தெள்ளத்தெளிவாகப் பேசலாம். ஆனால், நாம் ஆவியில் வாழவில்லையென்றால் நித்தியத் திட்டம் என்பது நம்மைப்பொறுத்தவரை வெறுமனே ஒரு academic காரியமாக இருக்கும். நாம் அதைப்பற்றி ஒரு நல்ல விரிவுரை கொடுக்க லாமேதவிர நம்முடைய நடைமுறை வாழ்க்கையிலே அந்தத் திட்டம் நிறைவேறாது. அதனால், தேவ னுக்கு எந்தப் பயனும் இல்லை. இது சாத்தியமா? தேவனுடைய நித்தியத் திட்டத்தைப்பற்றிய ஒரு

புரிந்துகொள்ளுதல் இருக்கிறது. ஆனால், நடைமுறையில் நாம் ஆவியில் வாழவில்லை என்பது சாத்தியமா? சாத்தியம்.

இதன் இன்னொரு பக்கம் என்னவென்றால், தேவனுடைய நித்தியத் திட்டத்தை நாம் புரிந்துகொள்ள வில்லை; ஆனால், ஆவியில் வாழ்கிறோம் என்பது சாத்தியமா? இது சாத்தியம் இல்லை. தேவனுடைய பிள்ளைகள் எல்லாரும் அவ்வப்போது, ஓரளவுக்கு, ஒரு குறிப்பிட்ட அளவுக்கு, பரிசுத்த ஆவியான வரைப் பின்பற்றலாம். ஆனால், தேவனுடைய நித்தியத் திட்டத்தைப்பற்றிய ஒரு வெளிப்பாடும், தரிசன மும் இல்லையென்றால் பல வேளைகளில் அவர்கள் ஆவியில் நடப்பதற்குப்பதிலாக தங்கள் சொந்த எண்ணங்களிலும், உணர்ச்சிகளிலும, தீர்மானங்களிலும் நடப்பார்கள். ஆனால், தாங்கள் ஆவியில் நடப்பதாக நினைத்துக்கொள்வார்கள்.

சரி, தேவனுடைய நித்தியத் திட்டத்தைப்பற்றிய ஒரு வெளிப்பாடும், தரிசனமும் இருக்கிறது. அப்போது அவர்கள் ஆவியில் நடப்பார்களா, வாழ்வார்களா என்றால், நடப்பார்கள். ஆனால், அதற்கு ஒரு விலைக்கிரயம் கொடுக்க வேண்டும். என்ன விலைக்கிரயம் என்றால் உண்மையிலேயே ஆவியில் நடப் பதற்கு ஒரு மனிதன் சிலுவையின் வழியில் வாழ வேண்டும்.

இரண்டுமே இருக்கிறது. தேவனுடைய நித்தியத் திட்டத்தைப்பற்றி வெளிப்பாடும் வேண்டும், அனுபவ வாழ்க்கையிலேயே, கிறிஸ்துவின் சிலுவை மரணத்தில் வாழ்வதற்கு நம்மை நாம் ஒப்புக்கொடுத்திருக்க வேண்டும். அதன் ஒரு சிறிய நடைமுறை வெளியாக்கம்தான் சொன்னேன். சிறுசிறு தீர்மானங்களிலே நாம் ஆவியில் வாழ்வது. பெரிய தீர்மானங்களிலே நாம் ஆவியில் நடப்பதில்லை. சிறுசிறு தீர்மானங் களிலே நாம் ஆவியானவரில் வாழ்வது.

இந்த மூன்றையும் நாம் நம் கருத்தில் கொள்வோம். ஏனென்றால் எப்போது தேவன் நம்மை நடத்துவார் என்று நமக்குத் தெரியாது. உலகப்பிரகாரமாக ஒரு நல்ல உணவைச் சமைத்துக் கொடுக்க வேண்டு மென்றால் அதற்கு முயற்சி தேவை. அப்படியானால், நாம் தேவனுக்காக மூன்று நிமிடம் பேச வேண்டு மென்றால் முயற்சியே இல்லாமல், எந்தப் பிரயத்தனமும் இல்லாமல், பேசிவிட முடியும் என்று எதிர் பார்ப்பது தவறு.

இன்னொன்றும் சொல்லுகிறேன். ஒவ்வொரு வாரமும் எல்லாரும் ஒரு சடங்கைப்போல் பேச வேண் டுமா? அப்படியல்ல. அந்தச் சபையில் ஒருவர் மட்டும்தான் பேசுவார். நாங்கள் அப்படியல்ல. எங்கள் சபையில் எல்லாரும் பேசுவார்கள் என்பதால் தேவன் மனம்மகிழ்ந்துவிடுவாரா? பூரிப்படைந்துவிடு வாரா? அதையும் நாம் பரிசுத்த ஆவியில்தான் செய்ய வேண்டும். நீங்கள் அமைதியாக இருந்தாலும் பரிசுத்த ஆவியில் அமைதியாயிருங்கள். பேசினாலும் பரிசுத்த ஆவியில் பேசுங்கள். சாட்சி கொடுப்ப தாக இருந்தாலும் சரி, கொடுக்காமல் இருந்தாலும் சரி, பரிசுத்த ஆவியில் கொடுங்கள் அல்லது கொடுக்காமல் இருங்கள். 1 நிமிடமோ, 2 நிமிடமோ, 5 நிமிடமோ, 10 நிமிடமோ ஆவியானவருக்குக் கீழ்ப்படிந்து, ஒரு எண்ணத்தைக் கொண்டுவாருங்கள். ஒவ்வொரு வாரமும் கொண்டுவர வேண்டும் என்று நான் சொல்லவில்லை. ஆனால், 2 வாரத்துக்கு ஒருமுறை அல்லது 3 வாரத்துக்கு ஒருமுறை தேவனுடைய வார்த்தையை அல்லது தேவனுடைய எண்ணத்தைக் கொண்டுவாருங்கள்.

இன்றைக்கு நான் பகிர்ந்துகொண்ட காரியத்தின் பாரம் உங்களுக்குப் புரிகிறதா? பேசுவது என்பது ஒரு சடங்காச்சாரத்துக்கு இல்லை. நாம் நம்முடைய காலத்தை வீணாக்கிக்கொண்டிருக்கக்கூடாது. இது ஒரு சடங்காச்சாரக் கூட்டமாக மாறிவிடக்கூடாது. A sense of urgency இருக்க வேண்டும். ஒரு அவசரம் இருக்க வேண்டும். தேவன் என்றைக்கு வேண்டுமானாலும் சூழ்நிலையை மாற்றுவார். இன்றைக்குத் தேவன வாய்ப்பைக் கொடுத்திருக்கிறார். நாளைக்கு அந்த வாய்ப்பு இருக்கும் என்று சொல்ல முடி யாது. நான் இன்றைக்கு இங்கு இருக்கிறேன். இந்த வீடு இங்கு இருப்பதால் என் வாழ்நாள் முழுவதும் நான் இந்த வீட்டில் இருப்பேன் என்று நீங்கள் யாரும் தவறாகக் கற்பனை செய்துகொள்ளாதீர்கள். தேவன் திடுதிப்பென்று காரியங்களை மாற்றுவார். எனவே, ஒரு urgency இருக்க வேண்டும். நாம் urgency இல்லாதவர்களாக வாழக்கூடாது. எப்படியும் கூட்டம் நடக்கும். ஆனால், அது வெறுமனே பாரம்பரியக் கூட்டமாக, பயனற்ற கூட்டமாக மாறிவிடும்.

எனவே, அருமையான சகோதர சகோதரிகளே! தயவுசெய்து பரிசுத்த ஆவியானவருக்குக் கீழ்ப்படிந்து 2 வாரத்துக்கு ஒருமுறையாவது நீங்கள் தேவனுடைய வார்த்தையைக் கொண்டுவாருங்கள். மற்ற பொறுப்புகளை ஏற்றுக்கொள்வதற்கு முன்வாருங்கள். தேவன்தாமே உங்களை உற்சாகப்படுத்துவாராக. நீங்கள் அப்படிப் பொறுப்புகளை எற்றுக்கொண்டால் தேவன் உண்மையாகவே உங்களை ஆசீர்வதிப் பார்.